**வரும் 02 அக்டோபர் 2020 கிராமசபைக் கூட்டத்தில் பங்கேற்பதன் மூலம் பங்கேற்பு ஜனநாயகத்தை உறுதி செய்வோம்**

**ஏன் ? எப்படி ?**


**தமிழ்நாடு உள்ளாட்சிகளை வலுப்படுத்துவதற்கான கூட்டமைப்பு**

**Forum for Strengthening Local Governments in Tamil Nadu**

*Email:tnfwppg@gmail.com, Phone: 08668091453*


இந்திய அரசியல் சாசன சட்டம் 73வது சட்டதிருத்தத்தின் அடிப்படை நோக்கம் கிராமப்புற பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதியை உறுதிபடுத்துவதாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் கிராம ஊராட்சிகளின் வளர்ச்சிக்கான மக்கள் பங்கேற்புடன் கூடிய திட்டமிடல் மிக முக்கியமான அம்சமாகும். குறிப்பாக அரசியல் சாசன சட்டத்தின் 11வது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 29 இனங்கள் தொடர்பான பணிகளையும் ஊராட்சி அளவில் ஒருங்கிணைத்து கிராம ஊராட்சி வளர்ச்சிக்கான திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

**15வது நிதிக்குழு: தமிழகத்திற்கான நிதி ஒதுக்கீடு**

15 வது நிதிக்குழு நிதியின் முதல் தவணையாக ரூ.901.75 கோடி கடந்த ஜூன் 17 ஆம் தேதியன்று மத்திய அரசிடமிருந்து தமிழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழக அரசிடமிருந்து இந்த நிதி மற்றும் மாநில அரசின் 5வது நிதிக்குழு நிதி ஆகியவை ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படவில்லை.

இந்த நிதி கிடைத்த 10 நாட்களுக்குள் மாநில அரசு கிராம ஊராட்சிகளுக்கு விடுவித்திட வேண்டும், அவ்வாறு விடுவிக்காவிட்டால் உரிய வட்டி தொகையினை வழங்கவேண்டும் எனவும் விதி உள்ளது *(15th finance commission recommendations chapter 5 xx).*

ஆனால் ஊராட்சிகளுக்கு இந்த நிதியானது இன்னும் வந்து சேரவில்லை என்பது மிகவும் அதிர்ச்சியான தகவலாக உள்ளது.

நிதி இல்லாமல் பணி செய்ய முடியாமல் தவிக்கும் பல உள்ளாட்சி பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சியரிடமும் நீதிமன்றங்களிடமும் வீதிகளிலும் போராடும் இந்த சூழலில் மேற்கண்ட நிதி மிகவும் அவசியமான ஒன்று.

எனவே 15வது மத்திய நிதிக்குழு நிதி மற்றும் 5 வது மாநில நிதிக்குழு நிதி ஆகியவற்றை இனியும் காலதாமதம் செய்யாமல், உடனடியாக கிராம ஊராட்சிகளுக்கு தமிழக அரசு விடுவிக்கவேண்டும்.

**இந்த கிராம சபையில் போடவேண்டிய தீர்மானங்கள்**

1. 15வது நிதிக்குழு மானியத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிலுவை தொகையை, 15 வது நிதிக்குழு பரிந்துரையில் (Chapter 5 xx) சொன்னபடி **<u>வட்டியுடன்</u>** சேர்த்து உடனடியாக நமது ஊராட்சிக்கு வழங்க வேண்டும்.
2. தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல் நடைபெறாத மாவட்டங்களில் உடனடியாக தேர்தல் நடத்தப்படவேண்டும்.

3. SC/ST (வன்கொடுமைகள் தடுப்பு சட்டம்) 1989 ன் படி உடனடியாக நமது மாவட்டத்தில் கோட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழு (SdVMC) விதி 17 (A) கூட்டங்கள் வரையறுக்கப்பட்ட காலமுறைப்படி தவறாமல் கூட்டப்பட வேண்டும்.
4. உள்ளாட்சியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது போல் சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு அளிக்கப்படவேண்டும்.
5. விவசாயிகள், மீனவர்கள் வாழ்வுரிமையை பறிக்கும் EIA 2020 சட்ட வரைவை திரும்பப்பெற வேண்டும்.
6. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடைபெறாத கிராம ஊராட்சியாக நமது ஊராட்சியை மாற்றுவதற்கான திட்டங்கள் வகுப்பது.
7. தனித்து வாழும் மற்றும் பெண் தலைமையிலான குடும்பங்களின் பொருளாதார வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டங்கள்.
8. இந்த நிதி ஆண்டில் அரசு திட்டங்களில் ஒன்றாவது நமது கிராம ஊராட்சியில் உள்ள ஒவ்வொரு விளிம்பு நிலை மக்களின் (தலித், பழங்குடியினர், உடல் ஊனமுற்றோர், மூன்றாம் பாலினத்தவர், இடம் பெயர்ந்த தொழிலாளர்கள், விதவை பெண்கள், பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள், இன்னும் பிற) குடும்பங்களுக்கு சேரச் செய்வது.
9. அனைத்து அரசு திட்டங்களின் பயனாளிகள் பட்டியல் கிராம சபை உறுப்பினர்களால் கிராம சபைக் கூட்டத்தில் விவாதித்து முடிவு செய்யப்பட வேண்டும். இதில் அனைத்து வகுப்புகளைச் சேர்ந்த மக்களையும் கலந்துகொள்ளச் செய்யவேண்டும்.

**கிராம சபையின் அதிகாரம் மற்றும் பொறுப்பு**

1. கிராம ஊராட்சியின் 18 வயது நிரம்பிய அனைத்து வாக்காளர்களும் அடங்கிய கிராம சபைக்கு, இந்திய அரசியலமைப்புச் சட்டம் 73வது திருத்தத்தின்படி சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
2. கிராம வளர்ச்சிக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது, பயனாளிகளை தேர்வு செய்வது மற்றும் வடிவமைக்கப்பட்ட திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குவது ஆகிய அதிகாரங்களை கிராம சபை பெற்றிருக்கிறது.
3. இச்சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கு அரசியல் சாசன அங்கீகாரம் உண்டு. எனவே, மக்கள் பங்கேற்புடன் கூடிய கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்திற்கு அரசியல்சாசன ஒப்புதல் கிடைக்கிறது. கிராம சபையால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தினை தகுந்த காரணம் இல்லாமல் மாவட்ட ஆட்சியர் கூட புறக்கணிக்க முடியாது.

**பங்கேற்போம்! பயன்பெறுவோம்!**

எனவே அடித்தள மக்களின் ஜனநாயக உரிமையை உறுதி செய்ய வரும் கிராம சபை கூட்டத்தில் பங்கேற்று, அதன் வழியாக தகுதி வாய்ந்த கிராம வளர்ச்சிக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதோடு நமது கிராம வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்து, அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஆதாரங்களை பயன்படுத்துவோம்.

**தமிழ்நாடு உள்ளாட்சிகளை வலுப்படுத்துவதற்கான கூட்டமைப்பு**

**Forum for Strengthening Local Governments in Tamil Nadu**

*Email:tnfwppg@gmail.com, Phone: 08668091453*